

சென்னை கிண்டி சிறுவர் பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் இரண்டாவது ஒருங்கிணைந்த நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு திட்ட அறிக்கையினை வெளியிட்டார். இந்நிகழ்வில் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, , முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ம) வனத்துறைத் தலைவர் . ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனவிலங்கு காப்பாளர் திரு. ராகேஷ் குமார் டோக்ரா, நீலகிரி வரையாடு திட்டம் திட்ட இயக்குநர் திரு. ம.கோ.கணேசன், இந்திய நாட்டு பிரிரநிதி யாஷ்வீர், (IUCN) பட்நாஹர் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி நகராட்சி அலுவலகத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முகமை துவக்கி வைத்து விண்ணப்பித்த பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்கள், நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் நகர கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை , மாநில சிறுபான்மையினர் நலன் உரிமை பிரிவு அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, நகர் மன்ற துணைத் தலைவர் க.ஸ்ரீதர், நகராட்சி ஆணையர் சரவணக்குமார் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் நகரக் கழக நிர்வாகிகள் உள்ளனர்

### சென்னை மாநகரில்

# 45 முதல்வர் படைப்பகங்கள் உருவாக்கிய பெருமை முதல்வரையே சாரும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, ஆக. 6-

சி.எம்.டி.ஏ. சார்பில் 30 "முதல்வர் படைப்பகங்களும்" மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 15 "முதல்வர் படைப்பகங்களும்" என மொத்தம் சென்னை மாநகரில் 45 "முதல்வர் படைப்பகங்கள்" உருவாக்கிய பெருமை நமது முதலமைச்சர் அவர்களையே சாரும் என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் முதன்மை மாநிலமாக மாற்றும் நோக்குடன், முதன்மை முதல்வரால் கட்டமைக்கப்படுகின்ற திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி, சென்னையின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், கல்லூரி மற்றும் பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும், வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, பொருளாதாரத்திலும், சமூக நீதியிலும் கவனம் செலுத்தி, ஏழை எளிய மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள பள்ளிகளை தரம் உயர்த்தி, அங்கு தேவையான உட்கட்டமைப்புகளை - அங்கன்வாடிகள், பூங்காக்கள், நடைபாதைகள், தரமான சாலைகள், தடையில்லா மின்சாரம், ஒளியளிக்கும் மின்விளக்குகள் - போன்ற வசதிகளை உருவாக்கி வருகிறது.

மழை மற்றும் வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில்



மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு விரைவில் திரும்பும் வகையில், மழைநீர் வடிகால் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்புகளை, இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் மேம்படுத்தியுள்ளோம். இது திறம்பட நடைபெற்று வரும் 'திராவிட மாடல்' ஆட்சியின் முக்கியமான முன்னேற்ற மாகும்.

முதலமைச்சர் அவர்களால், "முதல்வர் படைப்பகம்" என்ற திருவிழி கண்ணோட்டத்தில் உருவாக்க ப்பட்ட இந்த மாபெரும் திட்டத்தின் முதல் கட்டம், அவரை தேர்ந்தெடுத்த கொளத்தூர் தொகுதியில் தொடங்கப்பட்டது. மாதத்திற்கு குறைந்தபட்சம் 6,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில், உயர் கல்விக்கான அனைத்து வசதிகளுடன் உருவாக்கப்பட்ட இந்த "முதல்வர் படைப்பகம், சமீபத்தில் நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி தேர்வில் பயின்ற 6 மாணவர்களை வெற்றி பெறச் செய்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், முதல்வர் அவர்களுடைய உத்தரவின் பேரில் 30 இடங்களில் முதல்வர் படைப்பகம் அமைக்க திட்டமிடப்பட்டு, ரூ.268 கோடி செலவில் இது வரை 26 முதல்வர் படைப்பகளை துவக்கி வைத்திருக்கின்றனர். இவற்றை முதல்வர் அவரே காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சியின் சார்பில், மேயர் திருமதி.பிரியா ராஜன் அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர் தாயகம் கவி, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் பிரகாஷ், சிஇஓ சிவஞானம், ஆர்.டி.சி. கௌஷிக், பகுதி செயலாளர் தமிழ்வேந்தன், மண்டல குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களும் ஆகியோருடன் இணைந்து இப்பணிகளை துவக்கி வைத்துள்ளோம்.

இப்பொழுது து வக்கப்பட்ட இந்த அனைத்து பணிகளும் 2025 நவம்பர் மாத இறுதிக்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இப்பணிகள் முன்னேற்றத்தை மேயர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் போன்ற உள்ளாட்சி பிரதிநிதிகள் தினமும் கண்காணிக்க வேண்டும் என்பதும், முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களுக்கு நிறம் தீட்டும் வகையில் செயல்படவேண்டும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆண்டுக்குள் மேலும் 15 படிப்பகங்களை உருவாக்கும் திட்டத்தையும் சென்னை மாநகராட்சி அறிவித்து உள்ளது. இதன் தொடர்ச்சியாக, தற்போது வரை 45 "முதல்வர் படைப்பகங்கள்" சென்னை நகரில் உருவாக்கிய பெருமை முதல்வர் அவர்களையே சாரும்.

சென்னை பாரி முனை பகுதியில், வடசென்னையின் நுழைவாயிலாகக் கருதப்படும் பிராட்வே, பிரகாசம் சாலையில், மிகப்பெரிய நூலகம் உருவாக்கப்பட உள்ளது. இதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி. ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், சி.எம்.டி.ஏ. முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் மகா விஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர்கள் பாலமுருகன் ராஜன்பாபு, இணை இயக்குநர் (பொது நூலகம்) இளங்கோ சந்திரகுமார், மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு. கவிதா, மாநகராட்சி மண்டல அலுவலர் சரவணன், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### வேலூர் மக்களவைத் தொகுதியில்

# தேவையான அளவில் பொதுத்துறை வங்கிக் கிளைகள் உள்ளதா?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி !

புதுடெல்லி, ஆக. 6-

வேலூரில் உள்ள அணைக்கட்டு, கே.வி.குப்பம், வாணியம்பாடி, ஆம்பூர் மற்றும் குடியாத்தம் சட்டப்பேரவைத் தொகுதிகளில் பொதுத்துறை வங்கிக் கிளைகள் மற்றும் ஏடிஎம்கள் தேவையான எண்ணிக்கையில் உள்ளதா? என்று மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில், குறிப்பாக தமிழ்நாட்டின் வேலூரில் உள்ள அணைக்கட்டு, கே.வி.குப்பம், வாணியம்பாடி, ஆம்பூர் மற்றும் குடியாத்தம் சட்டப்பேரவைத் தொகுதிகளில் பொதுத்துறை வங்கிக் கிளைகள் மற்றும் ஏடிஎம்கள் தேவையான எண்ணிக்கையில் அமைத்திட ஒன்றிய அரசு தக்க நடவடிக்கைகள் முன்னெடுத்து ள்ளதா?

அப்படியானால், வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான தூரம் அல்லது மக்கள் தொகை வரம்புகள் குறித்து ஒன்றிய அரசிடம் ஏதேனும் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் அல்லது வழிகாட்டுதல்கள் உள்ளதா? அதன் விவரங்கள் தருக?

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் திறக்கப்பட்ட புதிய பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கை மற்றும் இந்த விதிமுறைகளின் கீழ் திறக்கப்பட்ட வங்கிக் கிளைகளின் பெயர்கள்;

ஜன் தன், டிபிடி மற்றும் பிஎம்ஜேஜேபிஒய் திட்ட ங்களிலி ருந்து பயனாளிகள் விலக்கப்படுவதற்கு வழிவகுக்கும் வங்கி உள்கட்டமைப்பில் கடுமையான இடைவெளி இருப்பதை ஒன்றிய அரசு ஒப்புக் கொள்கிறதா? அப்படியானால், இது தொடர்பாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட சரியான நடவடிக்கைகள் யாவை?

நகர்புற கிராமப்புற டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்க இந்தப் பகுதிகளில் இந்தியா போஸ்ட் பேமென்ட் வங்கிகள் அல்லது மொபைல் பேங்கிங் வேன்களை நிறுத்த அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள், முன்மொழியப்பட்ட காலக்கெடு மற்றும் இது தொடர்பாக செய்யப்பட்ட பட்ஜெட் ஒதுக்கீடு விவரம் தருக?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் நிதி அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் பங்கஜ் சௌத்ரி எழுத்து பூர்வமாக அளித்த



பதில் வருமாறு:

நாட்டின் அனைத்து மக்கள் வசிக்கும் கிராமங்களி லிருந்தும் 5 கிலோமீட்டருக்குள் வங்கி விற்பனை நிலையம் (வங்கி கிளை/வணிக நிருபர்/ இந்தியா போஸ்ட் பேமென்ட் வங்கி) கிடைப்பதை உறுதி செய்வதே அரசாங்கத்தின் முயற்சி.

ஜன் தன் தர்ஷக் (JDD) செயலி எனப்படும் புவியியல் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையிலான செயலி மூலம் வங்கி விற்பனை நிலைய ங்களின் கிடைக்கும் தன்மை கண்காணிக்கப்படுகிறது. JDD செயலியில் வங்கிகள் பதிவேற்றிய தரவுகளின் அடிப்படையில், நாட்டில் உள்ள மொத்த மக்கள் வசிக்கும் 6,01,328 கிராமங்களில், 6,00,803 (99.91%) கிராமங்கள் 5 கிமீ சுற்றளவில் வங்கி விற்பனை நிலையங்களால் (வங்கி கிளை/BC/IPPB) மூடப்பட்டுள்ளன. JDD செயலியில் 30.06.2025 அன்று வரைபடமாக்கப்பட்டபடி மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாட்டிற்கான வங்கிக் கிளைகள் மற்றும் ஏடிஎம்களின் நிலை பின்வருமாறு:

மகாராஷ்டிராவில் 7,593 வங்கி கிளைகள், 11,604 ஏடிஎம்கள் உள்ளது.

தமிழ்நாடு மாநிலத்தில் 6,397 வங்கி கிளைகள், 13,374 ஏடிஎம்கள் உள்ளது.

மேலும், புதிய வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான திட்டங்களுக்கான தரவு மையமாகப் பராமரிக்கப்படவில்லை.

தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிராவில், இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) முறையே 11,855 மற்றும் 14,020 அஞ்சல் அலுவலகங்களைக் கொண்ட DoP இன் நெட்வொர்க் மூலம் வங்கிச் சேவைகளை வழங்குகிறது என்று அஞ்சல் துறை (DoP) தெரிவித்துள்ளது. டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்க, கிராமப்புறங்களில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வீட்டு வாசலில் சேவைகளை வழங்குவதன் மூலம் IPPB உதவுகிறது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

# காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் உலகளவில் ஊக்குவிக்க நடவடிக்கை எடுப்பீர்!

## மக்களவையில் காஞ்சிபுரம் – க.செல்வம் கோரிக்கை!

புதுடெல்லி, ஆக. 6 .

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் உலகளவில் ஊக்குவிக்க நடவடிக்கை எடுப்பீர் என நாடாளுமன்றத்தில் ஒன்றிய அமைச்சகத்திடம் விதி 377-ன் கீழ் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் கோரிக்கை விடுத்து வினா எழுப்பினார்.

பட்டு சேலைகளின் ஏற்றுமதி குறித்து காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க, செல்வம், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் விதி 377 ன் கீழ் பட்டு சேலைகளின் ஏற்றுமதி குறித்த கோரிக்கை விடுத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரம் அதன் நேர்த்தியான கையால் நெய்யப்பட்ட பட்டு சேலைகள் உலகப் புகழ்ப் பெற்றது, இந்த பாரம்பரிய மிக்க கலை வடிவம் இந்தியாவின் மரபை வெளிப்படுத்துவது மட்டுமல்



லாமல், ஆயிரக்கணக்கான திறமையான நெசவாளர்கள் கைவினைஞ ர்களுக்கு வாழ்வாதாரத்தையும் வழங்குகிறது

இருப்பினும் காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளில் உலகளாவிய ஈர்ப்பு மற்றும் உயர் தரம் இருந்த போதிலும் நேரடி சந்தை அணுகல் இல்லாமை, போதுமான பிராண்டிங் சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் குறைவான அணுகுமுறை மின் வணிக ஏற்றுமதி உள்கட்டமைப்பு இல்லாமை மற்றும் சர்வதேச அளவில் பாதுகாப்பு குறித்த குறைந்த விழிப்புணர்வு போன்ற பல சவால்கள் காரணமாக, அவற்றின் ஏற்றுமதி திறன் குறைவாகவே உள்ளது.

இந்தப் பிரச்சினை களைத் தீர்க்கவும் பட்டு புடவைகளை உலகளவில் ஊக்குவிக்கவும், அரசாங்கம் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

1, காஞ்சிபுரத்தில் கிடங்கு, சோதனை மற்றும் பிராண்டிங் ஆதரவுடன் ஒரு பிரத்யேக பட்டு ஏற்றுமதி ஊக்குவிப்பு மையத்தை நிறுவுதல் வேண்டும். 2,சிறப்பு ஏற்றுமதி ஊக்கத்தொகைகளுடன் காஞ்சிபுரம் புடவைகளை ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (ODOP) கீழ் சேர்க்க வேண்டும். 3. டிஜிட்டல் அடிப்படையிலான பிராண்டிங் மற்றும் டிஜிட்டல் தளங்கள் மூலம் உலகளாவிய சந்தைபடுத்தலை எளிதாக்குதல் வேண்டும். 4. இந்தியாவின் கைநெசவு பிராண்டின் கீழ் சந்தைபடுத்தல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் பங்கேற்க செய்ய வேண்டும். 5.நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு திறன் மேம்பாடு மற்றும் ஏற்றுமதி தரநிலைகளுக்கு இணங்க நிதி உதவி வழங்குதல் வேண்டும்.

எனவே, வணிகம், தொழில் மற்றும் ஜவுளித் துறை அமைச்சர் , இந்த விஷயத்தை விரைவில் பரிசீலித்து, காஞ்சிபுரம் பட்டு புடவைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் .

இவ்வாறு க.செல்வம் எம்.பி. வலியுறுத்தினார்.

### தாம்பரத்தில் - தலைமை பொது மருத்துவமனை திறப்பு விழாவிற்கு வருகை தரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஆக.6-

மேற்கு தாம்பரம் முடிச்சூர் ரோட்டில் உள்ள கோன் கிருஷ்ணா திருமண மண்டபத்தில் தாம்பரம் மாநகர கழக பொது உறுப்பினர்கள் கூட்டம், துணை மேயர் கோ.காமராஜ் தலைமையிலும், மாநகர மேயர் க.வசந்தகுமாரி இரா.நரேஷ் கண்ணா பி.சதாசிவம் வ.விஜயரங்கன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாநகர கழக செயலாளர், எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. கூட்டத்தில் கழக வளர்ச்சிப் பணி, மேலும் கீழ்காணும் தீர்மானங்களை நிறைவேற்றி சிறப்புரையாற்றினார்.

முதலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின், மூத்த மகன் மு.க.முத்து அவர்களின் மறைவிற்கும், மாநகரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மறைந்த கழகத் தோழர்களுக்கு, இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. அதனையடுத்து வருகிற 9ஆம் தேதி, தாம்பரத்தில் மாவட்ட தலைமை பல் நோக்கு சிறப்பு மருத்துவமனையை திறந்து வைக்க வருகை தரும், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு, மாநகரக் கழகத்தின் சார்பில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட, கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கழகத் தோழர்கள், பெருந்திரளாய் ஒன்று கூடி எழுச்சி மிகுந்த வரவேற்பு, அளித்திட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது. இம் மருத்துவமனையை தாம்பரத்திற்கு கடந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கி கட்டி தந்தமைக்கு, கழகத் தலைவருக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

தாம்பரத்தில் ஆச்சேபனையற்ற, நிலங்களில் வீடு கட்டி வசிக்கின்றவர்களுக்கு நில பட்டாக்களை, வழங்குவதற்கு, ஆணை பிறப்பித்தமைக்கும், மதுரை மாநகரில் கூடிய பொதுக்குழு கூட்டத்தில், ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தோடு, கழக உறுப்பினர் சேர்க்கை பணியை தொடங்கி வைத்து இந்த பணியில் தீவிரமாக ஈடுபட்ட, மாநகரக் கழகத் தோழர்களுக்கும், பகுதி கழக செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், பாக நிலை முகவர்கள் ,பாக டிஜிட்டல் முகவர்கள், இவர்களோடு இணைந்து பணியாற்றிய கழகத் தோழர்களுக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 7ஆம் தேதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட, கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு, மலர் மாலை அணிவித்து மரியாதை செய்து பின்பு, தலைநகர் சென்னையில் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் அமைதிப் பேரணி சென்று கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மரியாதை செய்திடவும் மாநகரக் கழகத் தோழர்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொள்வது என்று தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டது.

இக்கூட்டத்தில், தலைமை பொதுக்குழு உறுப்பினர் க.தேவேந்திரன், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பரிதி இளம் சுருதி, மண்டல குழு தலைவர்கள் வே.கருணாநிதி, டி. காமராஜ், எஸ்.இந்திரன், பகுதி கழக செயலாளர் எஸ். சேகர், இரா.சுரேஷ், மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர, பகுதி இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் மாநகரக் கழக பொருளாளர் வ.விஜயரங்கன் நன்றி கூறினார்.




தாம்பரம் மாநகர கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்தில், மாநகரக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ உரையாற்றினார். இதில் மேயர்.க.வசந்தகுமாரி,துணை மேயர். கோ.காமராஜ், பரிதிஇளம்சுருதி, இரா.நரேஷ்கண்ணா, பி.சதாசிவம், வ.விஜயரங்கன், க.தேவேந்திரன், வே.கருணாநிதி, டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், இரா.சுரேஷ் மற்றும் ஏராளமான கலந்து கொண்டனர் .

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை! பத்ம பிரியா – படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு

# குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்.

## வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை

காஞ்சிபுரம், ஆக. 6 -

குன்றத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.வந்தே மாதரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய திமுக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று 6.8.2025 செவ்வாய்க்கிழமை மாலை 04.00 மணியளவில் கோவூர் ப்ரீத்தி திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக அவைத்தலைவர் து.சுந்தர் அவர்களின் தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை யாற்றிட உள்ளார். இக்கூட்டத்தில் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி மேற்பா ர்வையாளர், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் செல்வி. பத்மப்ரியா, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ. மனோகரன், குன்றத்தூர் ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஒன்றிய குழு துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தே மாதரம், தலைமை பொதுக் குழு உறுப்பினர் திரு. கே. எத்திராஜ், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ள இருப்பதால் ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கிளை கழக செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2) உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்து தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. முத்தமிழ்றிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் பேரணி. 2. தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் வருகை. 3. கழக வளர்ச்சி

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோம்பட்டு கிராமத்தை சேர்ந்த கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளி தரணிபாபு வாழ்வாதாரத்தை மேற்படுத்தி கொள்ள மடிக்கணினி வேண்டும் என வைத்த கோரிக்கையை தொடந்து முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் கும்முடிப்பூண்டி டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தன்னுடைய சொந்த செலவில் மடிக்கணினியினை வழங்கினார். உடன் மோகனசுந்தர், சந்திரமோகன், வீரமணிகண்டன், விஜய், மணி, சுரேஷ் உள்ளிட்டோர் இருந்தனர்